Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 81/2026 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | செல்வாம்பாள் |
| Father's Name | – | க/பெ. தண்டபாணி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused produced Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது நல்லூாத்துக்குளியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 11.12.2025 ம் தேதி காலை 10.45 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு உள்ள கதவின் அருகில் உட்கார்ந்திருந்தேன். சாலையில் சிகப்பு வண்டி ஒன்று நின்றுக்கொண்டிருந்தது. என்னிடம் வந்து தேங்காய் தருகீறிர்களா என்று கேட்டார், நான் இல்லையென்று கூறினேன். நான் முட்டையை கையில் வைத்திருந்தேன், அதை கேட்டார்கள், நான் கொடுப்பதில்லையென கூறியவுடனேயே நின்றிருந்தவர், எனது கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

எனது மகளும் மருமகனும் தோட்டத்தில் உழுவு ஓட்டிக்கொண்டிருந்தார்கள், நான் சத்தம் போட்டேன், அவர்கள் வந்து, போலிசாருக்கு தகவல் கூறினார்கள். போலிசார் உடனே சம்பவயிடம் வந்து என்னிடம் புகார் பெற்று சென்றார்கள். தற்போது என்முன் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிதான் என்னிடம் பேசிக்கொண்டிருந்து செயினை பறித்த சென்ற நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதி படித்து காண்பித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னுடைய புகாரில் தேதி குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல, 11.12.2025 ஆகும். சம்பவத்தன்று நான் எனது மகள் வீட்டில் இருந்தேன். சம்பவம் எங்கு நடைபெற்றது என்று குறிப்பிட்டு புகாரிலும் போலிசார் விசாரணையிலும் கூறவில்லையென்றால் சரியல்ல.

சம்பவம் நடந்த அன்று நான் எனது மகள் வீட்டில்தான் இருந்தேன் என்பதற்கு ஆதாரம் எதையும் கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. சம்பவம் எனது வீட்டின் எந்த பகுதியில் நடந்தது என்று குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல, வீட்டின் கதவின் அருகில் கிழபுறத்தில் பைப்பின் அருகில் சேரில் உட்கார்ந்திருந்தேன், அப்போதுதான் நடந்தது.

வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் வடக்கு பார்த்த வாசப்படியாகும். நான் அமர்ந்திருந்த நாற்காலி பிளாஸ்டிக் நாற்காலியாகும். எனது வீடு தோட்டத்திற்குள் உள்ளது. எனது தோட்டம் ஊருக்கு சற்று தள்ளியுள்ளது. எனது வீட்டின் முன்பு செட் உள்ளது. நான் அமர்ந்திருந்த இடத்திற்கும் செட்டிற்கும் இடையே சுமார் 20 அடி துாரமிருக்கும். எனக்கு அலைபேசி உள்ளது என்றால் சரிதான்.

சம்பவ சமயத்தில் எனது கையில் அலைபேசி இருந்தது. சம்பவ சமயத்தில் எதிரியை

நான் புகைப்படம் எடுக்கவில்லையென்றால் சரிதான். எனது தோட்டத்தின் அருகில் ஆட்கள் வசிக்கிறார்கள், எனது வீட்டிற்கு பின்னாலும் ஆட்கள் வசிக்கிறார்கள். எனது வீட்டிற்கு பின்னால் மற்றொரு வீடு உள்ளது. எனது கழுத்திலிருந்து சங்கிலியை அறுத்திருந்தால் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல, கழுத்திலிருந்து செயினை எடுக்கும்போது, அறுந்துவிட்டது. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

எனது கழுத்திலிருந்தது தங்க செயின் என்பதற்கு ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. மயிலாத்தாள் வீடு எனது வீட்டிற்கு பின்னால் உள்ளது. நான் அணிந்திருந்த தங்க சங்கிலி கோதுமை தங்க சங்கிலியாகும். அதை புகாரில் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. ஆஜர் எதிரி கழுத்திலிருந்து செயினை அறுக்கவில்லையென்றாலும், எதிரி குற்ற செயலில் ஈடுபடவில்லையென்றாலும் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லையென்றாலும், புகாருக்கும் சம்பந்தமில்லையென்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 81/2026 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மயிலாத்தாள் |
| Father's Name | – | க/பெ. செல்லமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused produced Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குரும்பம்பாளையம் காட்டில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. நான் வடபுறம் சென்றேன், செல்வாம்பாள் அங்கு உட்கார்ந்திருந்தார். நான் சென்றபோது, செயினை பிடிங்கிவிட்டு ஓடுகிறார் என்று சத்தம் போட்டார். அப்போதுதான் நான் கதவை திறந்துவிட்டு சென்றேன். வடபுறம் சென்றுவிட்டார். அவரை பிடிக்க முடியவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கும் செல்வாம்பாள் வீட்டிற்கும் சுமார் 20 அடி தூரம் இருக்கும், சுற்றிலும் மதில் உள்ளது. எனது வீட்டிலிருந்து பார்த்தால் செல்வாம்பாள் வீட்டின் பின்புறம் தெரியும். எதிரி எங்கிருந்து வந்தார், எங்கு சென்றார் என்று நான் பார்க்கவில்லையென்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லையென்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் வந்து பார்த்தேன் என்றால் சரியல்ல, சத்தம் போடுவதற்கு முன்னே நான் உள்ளே வந்துவிட்டேன். நான் எதிரியை பார்க்கவேயில்லையென்றாலும் சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாதென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 81/2026 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கௌசல்யா |
| Father's Name | – | க/பெ. சண்முகவேல் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused produced Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குரும்பம்பாளையம் காட்டில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 11.12.2025 ம் தேதி காலை 10 மணியளவில் நான் வீட்டிற்குள் சாப்பிட்டு கொண்டிருந்தேன். நான் ஜன்னல் வழியாக பார்த்தபோது, ஒரு நபர் என்னிடமும் எனது வீட்டுக்காரிடமும் வந்து தேங்காய் கேட்டார், நாங்கள் கொடுப்பதில்லையென்று கூறினோம். அவர் சென்றுவிட்டார். 10 நிமிடம் கழித்து எனது வீட்டுக்காரர் வந்து என்னிடம் அவர் சென்றுவிட்டாரா என்று கேட்டார். போய் விட்டார் என்று கூறினேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.